**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A. 1/2025 in O.S. No.194/2019**

1. மாரிமுத்து (எ) மகாராஜா (இறப்பு)
2. **நாகரத்தினம் வகையறா** ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

அரவிந்த்குமார் .... எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதி

இம்மனுவானது இறுதியாக இன்று(23.01.2026) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர்கள்.R.அசோகன், T.முத்தமிழ்செல்வன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.M.லோகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதியோ அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ அல்லது வேறு எந்த நபர்களோ தாவா சொத்துக்களை சுற்றி கம்பி வேலி அமைக்கவோ அல்லது சொத்துக்களில் உள்ள மரங்களை வெட்டவோ அல்லது சொத்துக்களின் தன்மையை மாற்றும் விதமான செயல்களை செய்யவோ அல்லது அத்து மீறி உள்ளே நுழைந்து பிரவேசிக்கவோ கூடாது என அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளையும், இம்மனு மீதான விசாரணை

முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளையும் வழங்கி உத்தரவிடவேண்டி ஆர்டர் 39 ரூல் 1 & 2ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவுரை சுருக்கம்**

**1.** தாவா சொத்தக்களை எதிர்மனுதாரர்/8ம்பிரதிவாதி கடந்த 28-07-2010ம் தேதி இந்த அசல் வழக்கு தாக்கல் செய்த பின்னர் 3, 6, 7 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றிருக்கிறார். அந்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரமும் கோரியுள்ளார்.

**2.** மேலும் தாவா சொத்துக்களின் அனுபோகம் முழுவதும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகள் வசம் இருக்கிறது. அதனால் சுவாதீனம் பரிகாரமும் கோரியுள்ளார்.

**3**. இந்நிலையில் எதிர்மனுதாரர்/8ம்பிரதிவாதி தாவா வழக்கு நிலுவையில் இருப்பதை மறைத்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருக்கிறார். அதில் தாவா சொத்துக்களின் நான்கு எல்லையை கண்டுபிடிப்பதற்காக அளவீடு செய்ய வேண்டுமென்று உரிய நில அளவையரிடத்தில் மனு கொடுத்திருந்தும், அவர்கள் அளவீடு செய்யாமல் இருந்து வருவதால், உடனே நிலங்களை அளவீடு செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியிருக்கிறார். எதிர்மனுதாரரின் கோரிக்கையை ஏற்று உயர்நீதிமன்றமும், 24.10.2024 தேதி உத்தரவு பிறப்புவித்துவிட்டது.

**4.** அதனடிப்படையில் தாவா சொத்துக்களை அளவீடு செய்ய நில அளவையர் முற்பட்ட விபரம் தெரிந்ததும் மனுதாரர் அதை தடுத்து நிறுத்தி விட்டார். மேற்படி ரிட் மனுவில் மனுதாரரையும், மற்ற மனுதார்களையும் தரப்பினர்களாக சேர்க்க வில்லை என்பதையும், சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு

நிலுவையில் இருக்கும் விபரத்தையும் தெரிவிக்கவில்லை என்பதையும் மறைத்து உத்தரவு பெற்றுள்ளார் என்பதையும் மனுதாரர் கூறியுள்ளார்.

**5.** மேற்படி ரிட் மனுவில் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மனுதாரர் அப்பீல் மனு ஒன்றை உயர்நீதியன்றத்தில் தாக்கல் செய்து விட்டார். அந்த அப்பீல் ரிட் மனுவில் 25-02-2025ம் தேதி உத்தரவு பிறப்புவிக்கப்பட்டது. அந்த உத்தரவில் நிலத்தினை அளவீடு செய்வதற்கும், அதில் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின், ஆத்தூர் வட்டாட்சியரிடம் ஆட்சேபணை தெரிவித்துக்கொள்ளலாம் என்றும், அந்த ஆட்சேபணையில் விசாரணை மேற்கொண்டு உத்தரவு பிறப்புவிக்க வேண்டுமென்றும், தெரிவித்து உத்தரவு பிறப்புவித்திருந்தது. அதனடிப்படையில் வட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் பிரகாரம் நில அளவையர் அவர்களால் சொத்து அளவீடும் செய்யப்பட்டுவிட்டது.

**6.** இந்நிலையில் மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவை மீறி உள்ளே பிரவேசித்து அதிலுள்ள மரங்களை ஆட்களை வைத்து வெட்டவும், JCB வாகனத்தை வைத்து நிலத்தின் தன்மையை மாற்றவும் முற்பட்டார். அதை மனுதாரர் தடுத்து நிறுத்தி விட்டார். உடனே எதிர்மனுதாரர் உயர்நீதிமன்ற உத்தரவை காரணம் காட்டி செம்பட்டி காவல் நிலையத்தில் மனுதாரர் மீது புகார் கொடுத்து விட்டார்.

**7.** அதாவது சொத்துக்களை அளந்து, அதன் நான்கு எல்லையை காண்பிக்க மட்டுமே உத்தரவு பிறப்புவிக்கப்பட்டுள்ளது என்றும், சொத்துக்களில் பிரவேசித்து மரங்களை வெட்டவோ, அல்லது சொத்தின் தன்மையை மாற்றவோ, சொத்துக்களை சுற்றிலும் கம்பி வேலி அமைக்கவோ

பிறப்புவிக்கப்படவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இருந்தும் போலீசார் அதை ஏற்க மறுத்து விட்டனர்.

**8.** இந்த எதிர்மனுதாரர்/8ம்பிரதிவாதி நிலத்தை அளப்பதற்கு மட்டுமே உத்தரவு பெற்றுள்ளார். ஆனால் மறைமுகமாக சொத்துக்களின் சுவாதீனத்தை அடையும் வகையில் அத்துமீறி பிரவேசித்து மரங்களை வெட்டி சொத்தின் தன்மை மாற்றி, அதன் மூலம் சொத்தின் சுவாதீனம் தன்வசம் இருக்கிறது என்பதை சமூகம் நீதிமன்றத்தில் தெரிவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

**9.** ஏற்கனவே 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்குகளில் உயர்நீதிமன்றம் சொத்துக்களின் சுவாதீனம் அவர்கள் வசம் உள்ளது என்பதை உறுதிபடுத்தி உத்தரவும் பிறப்புவித்துள்ளது. தற்போது அதை மறைத்து அளவீடு என்ற முறையில் உத்தரவு பெற்று வந்து, மறைமுகமாக சொத்துக்களில் பிரவேசிக்க எதிர்மனுதாரர்/8ம்பிரதிவாதி முபற்சிக்கிறார். எனவே, மனுதாரர் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3).எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பு எதிர்மனுவுரை சுருக்கம்**

**i).** எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 8ம் பிரதிவாதி ஆவார்.

ii). மனுதாரர்கள் / வாதிகளால் தாக்கல் செய்திருக்கும் அபிடவிட்டு பாரா 4-ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி தாவா சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியிருப்பது பொய்யாகும். அபிடவிட்டு பாரா 5-ல் எதிர்மனுதாரர் 24.10.2024ஆம் தேதி தாவாச் சொத்தினை அளவீடு செய்ய writ மனு (MD:25267/2024)-ல் உத்தரவு பெற்றதாக

சொல்லியிருப்பது மட்டும் உண்மையாகும். அசல் வழக்கு நிலுவையில் இருப்பதை மறைத்து உத்தரவு பெற்றதாக சொல்லியிருப்பது உண்மை அல்ல.

iii). மேலும் அபிடவிட்டு பாரா 7–ல் சொல்லியிருக்கும் விஷயங்களில் பல உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அபிடவிட்டு பாரா 8–ல் உயர் நீதிமன்ற உத்தரவினை எதிர்மனுதாரர் துஷ்பிரயோகம் செய்து தாவா சொத்துக்களின் அத்துமீறி பிரவேசித்து ஆட்களை வைத்து மரங்களை வெட்டவும், JCB–யை வைத்து நிலத்தின் தன்மையை மாற்றவும், முயற்சித்ததாகவும் சொல்லியிருப்பது பொய்யாகும். மேலும், தாவாச் சொத்துக்களின் நான்கு எல்லையை காண்பிக்க மட்டுமே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மரங்களை வெட்டவோ சொத்தின் தன்மையை மாற்றவோ, வேறு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லையென்று துலக்கியிருப்பது சட்டப்படி ஏற்புடையதாக இல்லை ஏதோ எதிர்மனுதாரர் சொத்தினை அளப்பதற்கு மட்டுமே உத்தரவு பெற்றதாகவும், சுவாதீனம் பெற அத்திமீறி பிரவேசித்து மரங்களை வெட்டி சுவாதீனம் எதிர்மனுதாரர் கைவசம் இருப்பதாக நீதிமன்றத்தின் முன்பு தெரிவிக்க ஏதோ முயற்சித்து வருவதாகவும் சொல்லியிருப்பது பொய் ஆகும்.

iv). அபிடவிட்டு பாரா 11–ல் 1,2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்திருக்கும் வழக்குகளில், சொத்துக்களின் சுவாதீனம் அவர்களின் வசம் தான் உள்ளது என்று உறுதிப்படுத்தி உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், ஏதோ எதிர்மனுதாரர் அதை மறைத்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அளவீடு என்ற முறையில் உத்தரவு பெற்று மறைமுகமாக சொத்துக்களில் பிரவேசிக்க எதிர்மனுதாரர் முயற்சிப்பதாகவும் சொல்லியிருப்பது பொய் ஆகும்.

v). வழக்கில் கண்ட சொத்துக்கள் 3,6,7 பிரதிவாதிகளுக்கு கடந்த 06.06.1996ஆம் தேதிய உயில் சாசனப்படி பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து கடந்த

28.07.2010ஆம் தேதிய ஆவண எண்.1169/2010−ன்படி தாவாச் சொத்துக்களை மேற்படி 3,6,7 பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்கு சரியான பிரதி பிரயோஜனத்தின் பேரில் கிரையம் செய்து கொடுத்தனர். எதிர்மனுதாரர் தாவாச் சொத்துக்களை கிரையம் பெற்ற 28.07.2010ஆம் தேதியிலேயே பிராது சொத்தையும் சுவாதீனம் அடைந்து எதிர்மனுதாரர் பெயருக்கு பட்டா மாற்றி உரிய கிஸ்தியைச் செலுத்தி எதிர்மனுதாரர் நாளது தேதி வரை அனுபவித்து வருகிறார். தாவா சொத்துக்களைப் பொறுத்து கடந்த 28.07.2010ஆம் தேதியிலிருந்து எதிர்மனுதாரரைத் தவிர வேறு எவருக்கும் எந்தவித பாத்தியமோ, அனுபவமோ, உரிமையோ இருந்தது கிடையாது அவ்வாறிருக்கையில் தாவா மனுவினைத் தாக்கல் செய்து தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர மனுதாரர்கள் / வாதிகளுக்கு சட்டப்படி எந்தவித உரிமையும் கிடையாது

vi). வழக்குச் சொத்துக்களைத் தவிர வேறு பல சொத்துக்களையும் எதிர்மனுதாரர் கடந்த 28.07.2010ஆம் தேதியை ஆவண எண். 1167/2010−ன்படி உண்மையான பாத்தியஸ்திரமிருந்து எதிர்மனுதாரர் சரியான பிரதிப் பிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். எதிர்மனுதாரர் எதார்த்தமாகவும், நல்ல எண்ணத்துடனும் வழக்குச் சொத்துக்களை 3,6,7 பரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்று, கிரையம் பெற்ற பின் ரூ.2,00,000/−க்கு மேல் செலவு செய்து அபிவிருத்தி செய்துள்ளார். உண்மை இவ்வாறிருக்க ஏதோ 1,2 பிரதிவாதிகள் 1 முதல் 4 லக்கச் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்ததாக துலக்கியிருப்பது உண்மையில்லை 1,2 பிரதிவாதிகளுக்கும், தாவாச் சொத்துக்களுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது எனவே 1,2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று கோரியிருப்பதும், 1,2 பிரதிவாதிகளின் வசம் தான் தாவாச் சொத்துக்கள் இருப்பதாக

சொல்லியிருப்பதும், மனுதாரர்கள் / வாதிகளால் தாவா வழக்கிற்காகவும், மனுவிற்காகவும் பொய்யாக சொல்லப்பட்ட சங்கதிகளாகும்

vii). தாவாச் சொத்துக்களை எதிர்மனுதாரர் கிரையம் பெற்றபின் எதிர்மனுதாரருடைய தனித்த சுவாதீனத்தில் இருந்து வந்துள்ள நிலையில் அளவீடு செய்ய சர்வேயருக்குப்படி கட்டி அளந்ததில் மனுதார்கள் / வாதிகள் தரப்பில் அளக்க தடை செய்ததால் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ரிட் மனு தாக்கல் செய்து பின்னிட்டு 2ம் மனுதார் / 2ம் வாதி தனக்கு அறிவிப்பு கொடுத்து தான் அளவீடு செய்ய வேண்டுமென்று கோரி Writ Appeal W.A.No. 71/2025-ல் தாக்கல் செய்து 25.02.2025ஆம் தேதிய உத்திரவின் படி அளக்கப்பட்டது. தாவாச் சொத்துக்களைப் பொறுத்து அளப்பதில் மனுதார்கள் / வாதிகள் பிரச்சனை செய்ததால் தான் தாவாச் சொத்தினை அளக்க உத்திரவு பிறப்புவிக்கப்பட்டுள்ளது. எனவே W.A.No. 71 / 2025-ல் கண்ட உத்திரவில் தாவாச் சொத்து எதிர்மனுதாரருடைய சொத்து என துலக்கப்பட்டே அளவீட்டிற்காக மட்டுமே உத்திரவு பிறப்புவிக்கப்பட்டுள்ளது.எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4).** இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>5). தீர்வு</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் /வாதிகள் இவ்வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமைவிளம்புகை பரிகாரம் , சுவாதீனமீட்பு பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் 3,6,7,8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து செய்து

கொடுத்த கிரைய பத்திரங்கள் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது கடந்த 2010ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 15 ஆண்டுகளாக இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இவ்வழக்கு ஏற்கனவே இருந்து வந்த நிலையில், இந்த இடைகால மனு 8ம் பிரதிவாதிக்கு எதிராக வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள்/வாதிகள் தங்களுடைய மனுவில் தாவா சொத்தில் உள்ள மரங்களை வெட்டி சொத்தின் தன்மை மாற்றி அதன் மூலம் சொத்தின் சுவாதீனம் தன்வசம் இருக்கிறது என்பதை காட்டுவதற்கு 8ம் பிரதிவாதி முயற்சி செய்கிறார் என்றும், எனவே 8ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் உள்ள மரங்களை வெட்டவோ அல்லது சொத்தின் தன்மையை மாற்றும் விதமான செயல்களில் செய்யவோ அத்துமீறி நுழையவோ கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை கேட்டு மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவை பார்க்கும்போது, 8ம் பிரதிவாதி ஆட்களை வைத்து மரங்களை வெட்டவும், ஜே.சி.பி வாகனத்தின் மூலம் நிலத்தின் தன்மையை மாற்றவும் முட்பட்டதற்கு செம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளதற்கு அம்மனுவின் நகலையோ, மனு ரசிதின் நகலையோ, முதல் தகவல் அறிக்கையையோ மனுதாரர்களின் மேற்கூறிய கூற்றை ஒத்துரைக்கும் விதத்தில் இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவில்லை. நம்பதகுந்த வகையில் 8ம் பிரதிவாதி இவ்வழக்கு சொத்தின் சுவாதினத்தில் இல்லை என்றும், தாவா சொத்தில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு முயற்சித்தார் என்றும், தாவா சொத்தின் தன்னையை

மாற்ற முயற்சித்தார் என்றும் மனுதாரர்கள் கூறியுள்ள கூற்றை தகுந்த ஆதாரங்களுடன் முதல்நோக்கில் இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்கவில்லை.

மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தை பொறுத்து சுவாதின மீட்பு பரிகாரத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையிலும், தாவா சொத்திற்கான உரிமை மூலம் யாருக்கு உள்ளது என்பதை இவ்வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்பட இருப்பதாலும், உண்மையில் தாவா சொத்தில் உள்ள சொத்துக்களுக்கு இழப்பு ஏற்ப்பட்டிருப்பின் அவற்றை வழக்கிடையில் சாட்சியங்கள் மூலம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு நிரூபிக்க சட்டப்படி வாய்ப்பு உள்ளது. இவ்வழக்கில் வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரத்தை வாதிகள் இவ்வழக்கில் நிரூபிக்கும் பட்சத்தில் , வழக்கு சொத்தில் ஏற்பட்ட இழப்பினையும் சேர்த்து சட்டப்படி மனுதாரர்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

தாவா சொத்துக்களின் உரிமைமூலம் மற்றும் சுவாதீனமீட்பு பரிகாரத்தை பொறுத்து, இவ்வழக்கில் பின்னிட்டு இந்நீதிமன்றம் தீர்மானிக்க இருப்பதாலும், வாதிகள் வசம் தாவா சொத்தின் சுவாதீனம் இல்லை என ஏற்கனவே ஒப்புக்கொண்டு இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளதாலும், 8ம் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து அதிலுள்ள மரங்களையும் தன்மையையும் மாற்ற முயற்சிக்கிறார் என்று மனுதாரர்கள் சொல்லியுள்ள கூற்றை தகுந்த ஆதாரங்களுடன் முதல்நோக்கில் மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கவில்லை என்பதாலும், மனுதாரர்கள்/வாதிகள் இந்த 8ம் பிரதிவாதிக்கு எதிராக இம்மனுவின் மூலம் கேட்டுள்ள தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு இவ்வழக்கின் தற்போதைய நிலையில் கிடைக்கத்தக்கதல்ல என்று

இந்நீதிமன்றம் தீர்மானித்து, நீதியின் நலன் கருதி, மனுதாரர்கள்/ வாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

முடிவில், மனுதாரர்களின் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.01.23 16:58:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.